**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை– 600 006**
**தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வு, மே/ஜூன் 2025**
**தனித் தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்றல்**

**செய்திக் குறிப்பு**

மே/ஜூன் 2025–ல் நடைபெறவுள்ள தொடக்கக் கல்வி பட்டயத் தேர்விற்கு தனித் தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. விண்ணப்பிக்க விரும்பும் தனித்தேர்வர்கள் www.dge.tn.gov.in என்ற இணையம் வழியாக விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து, அவ்விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து, **ஏற்கனவே தேர்வெழுதி தேர்ச்சி பெற்ற மதிப்பெண் சான்றிதழ்களின் அனைத்து நகல்களையும் கண்டிப்பாக இணைத்து** தேர்வர் வசிக்கும் மாவட்டத்தில் அமைந்துள்ள மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வாயிலாக கீழ்க்குறிப்பிட்ட தேதிகளில் விண்ணப்பிக்க வேண்டும். மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் Web Camera பொருத்தப்பட்டுள்ளதால், அந்நிறுவனங்களிலேயே புகைப்படத்துடன் கூடிய விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்து தேர்வுக் கட்டணத்தினையும் செலுத்த வேண்டும்.

**தேர்வுக் கட்டண விவரம்**

| | |
|---|---|
| ஒவ்வொரு பாடத்திற்கும் | ரூ. 50/– |
| மதிப்பெண் சான்றிதழ் (முதலாமாண்டு) | ரூ.100/– |
| மதிப்பெண் சான்றிதழ் (இரண்டாமாண்டு) | ரூ.100/– |
| பதிவு மற்றும் சேவைக்கட்டணம் | ரூ. 15/– |
| ஆன்–லைன் பதிவுக் கட்டணம் | ரூ. 70/– |

**தேர்வுக் கட்டணம் செலுத்த மற்றும் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டிய நாட்கள்**

**18.03.2025 (பிற்பகல்) முதல் 24. 03.2025 வரை (ஞாயிற்றுக்கிழமை தவிர)**

---

**சிறப்பு அனுமதித்திட்டம் ( TATKAL )**

18.03.2025 முதல் 24.03.2025 வரையிலான தேதிகளில் விண்ணப்பிக்கத் தவறும் தேர்வர்கள், சிறப்பு அனுமதி திட்டத்தில் (TATKAL) 25.03.2025 மற்றும் 26.03.2025 தேதிகளில் விண்ணப்பிக்க வேண்டும். (சிறப்பு அனுமதிக் கட்டணம் ரூ.1000/–)

தகுதியற்ற தேர்வர்களின் விண்ணப்பங்கள் இரத்து செய்யப்படும்.

தபால் வழி பெறப்படும் விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

ஒம்/–
இயக்குநர்

இடம் : சென்னை–600 006
நாள்:. 14.03.2025.